# 01-12-2023 செய்தி

## மியான்மார் இந்தியா உறவுகள்

**பின்னணி:**

- 1948 ஆம் ஆண்டு பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1962ன் போது ஜனநாயக ஆட்சியைக் கலைத்து விட்டு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.
- பின், 2012இல் தேசிய ஜனநாயக லீக் எதிர்கட்சியானது.
- பின்னர், 2015 முதல் 2021 வரை அக்கட்சியே ஆட்சியில் இருந்தது.
- இதற்கு பின்னர் ராணுவம் மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது.

**தற்போதைய சூழல்:**

- தற்போது ராணுவத்தினருக்கும் தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.
- அது உள்நாட்டுப்போராக மாற்றம் கண்டுள்ளது.
- இந்தியாவுடன் 1643 கிமீ எல்லை கொண்டுள்ள மியான்மரில் இது போன்ற சூழல் இந்தியாவிற்கு கடும் சவால்களை தரக்கூடும்.

**சவால்கள்:**

- முதலாவதாக, அங்கு இருக்கும் ராணுவ ஆட்சிக்கு எதிராக இந்தியா உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.
- அங்கு ஜனநாயக ஆட்சியை கொண்டு வர இந்தியா வலியுறுத்த வேண்டும்.
- தேசிய ஐக்கிய முன்னணி போன்ற போராட்ட குழுக்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமா என்பதை இந்தியா தெளிவு படுத்த வேண்டும்.
- இறுதியாக, மியான்மரில் ஏற்பட்டுள்ள அசாதரண சூழலால் விளையும் அகதிகள் பிரச்சனையில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.

SURESH'